©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 33] CHENNAI, WEDNESDAY, AUGUST 31, 2011
Aavani 14, Thiruvalluvar Aandu–2042

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

| | Pages. |
|---|---|
| HEALTH AND FAMILY WELFARE DEPARTMENT | |
| Food Safety and Standards Act—Principal Secretary to Government, Health and Family Welfare Department, notified as Commissioner of Food Safety for the State of Tamil Nadu | 316 |
| HIGHER EDUCATION DEPARTMENT | |
| Thiruvalluvar University Act—Nomination of Two Headmasters of Higher Secondary Schools within the University Area as Members to the Academic Council of Thiruvalluvar University for certain period .. .. .. .. | 316 |
| HOME DEPARTMENT | |
| Tamil Nadu Protection of Interests of Depositors (in Financial Establishments) Act—Ad-interim order of attachment of the Properties of the Thiruvalargal Sree Kumaraguru Financiers, Udumalpet .. | 316 |
| HOUSING AND URBAN DEVELOPMENT DEPARTMENT | |
| Tamil Nadu Town and Country Planning Act—Declaration of the area Comprising Punjaipuliyampatti Third Grade Municipality to be a Local Planning Area .. .. | 316 |
| தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | |
| Industrial Disputes Act— Disputes between Workmen and Managements referred to Labour Courts for adjudication.. | 316-318 |
| PUBLIC DEPARTMENT **(General-1)** | |
| துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது 2011 .. .. .. .. | 319 |

## NOTIFICATIONS BY GOVERNMENT

HEALTH AND FAMILY WELFARE DEPARTMENT

**Principal Secretary to Government, Health and Family Welfare Department, notified as Commissioner of Food Safety for the state of Tamil Nadu under the Food Safety and Standards Act.**

*[Letter No. 31066/AB2/2011-4, Health and Family Welfare, 11th August 2011.]*

ERRATUM TO NOTIFICATION

The following erratum is issued to G.O.Ms. No. 197, Health and Family Welfare Department, dated 4th August 2011 Published as Notification No. II (2)/HF/358(c)/2011, at Page 1 of Part II-Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th August 2011.

ERRATUM

In the said Notification *for* "sub-section (i)"*read* "sub-section (1)".

GIRIJA VAIDYANATHAN,
*Principal Secretary to Government.*

HIGHER EDUCATION DEPARTMENT

**Nomination of Two Headmasters of Higher Secondary Schools within the University Area as Members to the Academic Council of Thiruvalluvar University for certain period under the Thiruvalluvar University Act.**

*[G.O.(1D) No. 146, Higher Education (K2), 5th August 2011, Aadi 20, Thiruvalluvar Aandu-2042.]*

No. II(2)/HE/384/2011.—Under Chapter III, sub-section 1(q) of the Section 20 of the Thiruvalluvar University Act, 2002, the Pro-Chancellor of Thiruvalluvar University has nominated the following Two Headmasters of the Higher Secondary School within the university area as members to the Academic Council of Thiruvalluvar University for a period of three years with effect from the date of issue of this order.

(i) Thirumathi M. Rajakumari, M.Sc., M.Ed., M.Phil,
Headmistress.
Government Higher Secondary School,
Veppur, Cuddalore District.

(ii) Thiru N. Krishnamurthi,
Headmaster,
Government Higher Secondary School,
Onnupuram, Arani Taluk,
Thiruvannamalai District.

R. KANNAN,
*Principal Secretary to Government.*

HOME DEPARTMENT

Ad-interim order of attachment of the Properties of the Thiruvalargal Sree Kumaraguru Financiers, Udumalpet under Tamil Nadu Protection of Interests of Depositors (in Financial Establishments) Act.

RESCISSION OF NOTIFICATION

*[G.O. Ms. No. 437, Home (Police XIX), 5th August 2011.]*

No. II(2)/HO/385/2011.-In exercise of the powers conferred by Section 3 of the Tamil Nadu Protection of interests of Depositors (in Financial Establishments) Act, 1997 (Tamil Nadu Act 44 of 1997), the Governor of Tamil Nadu hereby rescinds the Home Department Notification No. II(2)/HO/303/2004, published at Pages 192 and 193 of Part II - Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 21st April 2004.

RAMESHRAM MISHRA,
*Principal Secretary to Government.*

HOUSING AND URBAN DEVELOPMENT DEPARTMENT

**Declaration of the area Comprising Punjaipuliyampatti Third Grade Municipality to be a Local Planning Area under the Tamil Nadu Town and Country Planning Act.**

*[G.O. Ms. No. 113, Housing and Urban Development [UD 4(2), 9th August 2011.]*

No. II(2)/HOU/386/2011.—In exercise of the powers conferred by sub-section (4) of Section 10 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972) the Governor of Tamil Nadu hereby declares the area comprising Punjaipuliyampatti Third Grade Municipality to be Punjaipuliyampatti Local Planning Area, the intention to do so has been previously published as required by clause (b) of sub-section (1) of Section 10 of the said Act.

K. PHANINDRA REDDY,
*Secretary to Government.*

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**Disputes between workmen and managements referred to Labour Courts for adjudication.**

**தமிழ்நாடு குழிப்பந்தாட்ட குழுமம், சென்னை—15.**

*[அரசாணை (டி) எண் 243, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 1 ஆகஸ்ட் 2011. ஆடி 16, திருவள்ளுவர் ஆண்டு 2042.]*

No. II(2)/LE/387/2011.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக சென்னை தமிழ்நாடு குழிப்பந்தாட்ட குழுமம், என்ற நிர்வாகத்திற்கும், குழிப்பந்தாட்ட குழுமம் தொழிலாளர் விடுதலை முன்னணி என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

**2.** மேற்சொன்ன தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**3.** எனவே 1947—ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடப்படுகிறது.

**4.** மேலும், 1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## இணைப்பு

### எழுவினாக்கள்

**கோரிக்கை எண் 2**

சென்னை, குழிப்பந்தாட்ட குழுமத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் ரூ.750/– உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**கோரிக்கை எண் 3**

சென்னை, குழிப்பந்தாட்டக் குழுமத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மாறும் அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண் 4**

சென்னை, குழிப்பந்தாட்டக் குழுமத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் ஒவ்வொரு வருடமும் ரூ.50/– வழங்கப்பட வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

இல்லையெனில் உரிய நிவாரணம் வழங்கவும்.

**கோரிக்கை எண் 5**

தீபாவளி பண்டிகைக்கு 8.33% போனசும், பொங்கல் பண்டிகைக்கு 8.33% போனசும் வழங்குவதை உயர்த்தி மொத்தமாக 20% வழங்கக் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண் 6**

தற்போது ஏற்படுத்தப்படும் அடிப்படைச் சம்பளம் மற்றும், மாறுகின்ற அகவிலைப்படிக்கேற்ப வழக்கத்தில் உள்ள 6.5% மருத்துவப்படியை உயர்த்த வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண் 7**

கல்வி உதவித்தொகை, சம்பளத்தில் 50% இனாமாகவும், 50% கடனாகவும் வழங்கப்படுவதை மாற்றி ஒரு மாத சம்பளம் இனாமாக வழங்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண் 8**

வேலைப்பளு காரணமாக தற்செயல் விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பு எடுக்காத தொழிலாளர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண் 9**

சென்னை, குழிப்பந்தாட்டக் குழுமத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி உயர்வு வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

இல்லையெனில் உரிய தொகை நிர்ணயிக்க.

**கோரிக்கை எண் 10**

சென்னை, குழிப்பந்தாட்டக் குழுமத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் போக்குவரத்துப் படியாக மாதம் ரூ.300/– வழங்கப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**கோரிக்கை எண் 11**

சென்னை, குழிப்பந்தாட்டக் குழுமத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சிறப்பு ஊதியத் தொகை உயர்வு வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய தொகை நிர்ணயிக்க.

**கோரிக்கை எண் 12**

10 வருடங்களுக்கு மேலாக ஒரே பதவியில் பணியாற்றி வரும் தொழிலாளர்களுக்கு உத்யோக உயர்வுடன் ஊதிய உயர்வு அளிக்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண் 13**

தற்போது வழங்கப்பட்டு வரும் கடனுதவி தொகையை ரூ.15,000/– லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தித் தர வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண் 14**

சென்னை, குழிப்பந்தாட்டக் குழுமத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வருடாந்திர ஊதிய ஊயர்வு அடிப்படைச் சம்பளத்தில் 5% வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

இல்லையெனில், உரிய தொகை நிர்ணயிக்க.

**கோரிக்கை எண் 16**

சென்னை, குழிப்பந்தாட்டக் குழுமத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வருடத்திற்கு இரண்டு ஜோடி சீருடை மற்றும் இரண்டு ஜோடி காலணிகள் வழங்கவேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

இல்லையெனில், உரிய தொகை நிர்ணயிக்க.

**கோரிக்கை எண் 17**

சென்னை குழிப்பந்தாட்டக் குழுமத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கு திருமணம் மற்றும் இறப்பு போன்ற நேர்வுகளில் தற்போது வழங்கப்படும் தொகைகளை உயர்த்தி வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய தொகைகளை நிர்ணயிக்க.

## சுவா எக்ஸ்ப்ளோசிவ்ஸ் அண்ட் அக்சசரீஸ் லிட்., ஒன்னல்வாடி, ஒசூர்.

*[அரசாணை (டி) எண் 251, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (சி)த் துறை, 5 ஆகஸ்ட் 2011.]*

No. II(2)/LE/388/2011.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக சுவா எக்ஸ்ப்ளோசிவ்ஸ் அண்ட் அக்சசரீஸ் லிட்., ஒன்னல்வாடி, ஒசூர் என்ற நிர்வாகத்துக்கும், ஒசூர் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் அண்டு ஜெனரல் எம்ப்ளாயீஸ் யூனியன் என்ற தொழிற்சங்கத்துக்குமிடையே தொழில் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

எனவே, 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சேலம் தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண் 1**

அனைத்து தொழிலாளர்களுக்கும் அடிப்படை சம்பளத்தில் தற்போது இருப்பதுடன் கூடுதலாக ரூ.1000/– வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? இல்லை எனில் உரிய நிவாரணம் என்ன?

**கோரிக்கை எண் 2**

தற்போது அளித்துவரும் தொகையைவிட கூடுதலாக ரூ.2000/– வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? இல்லை எனில் உரிய நிவாரணம் என்ன?

**கோரிக்கை எண் 4**

தற்போது அளித்துவரும் வீட்டு வாடகைப்படியைவிட கூடுதலாக ரூ.1000/– வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? இல்லை எனில் உரிய நிவாரணம் என்ன?

**கோரிக்கை எண் 5**

தற்போது அளித்துவரும் போக்குவரத்துப் படியைவிட கூடுதலாக ரூ.300/– வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? இல்லை எனில் உரிய நிவாரணம் என்ன?

**கோரிக்கை எண் 15**

பண்டிகை முன்பணமாக ரூ.5,000/– வழங்கி அதை 10 தவணை முறையில் பிடித்தம் செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? இல்லை எனில் உரிய நிவாரணம் என்ன?

**கோரிக்கை எண் 18**

வருடாந்திர சம்பள உயர்வு ஸ்லாப் மாற்றி வருடாந்திர சம்பள உயர்வை ரூ.100/– என்று உயர்த்தி வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? இல்லை எனில் உரிய நிவாரணம் என்ன?

**செவ்ரான் லூப்ரிகண்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிட்., சென்னை–44**

*[அரசாணை (டி) எண் 256, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 11 ஆகஸ்ட் 2011, ஆடி 26, திருவள்ளுவர் ஆண்டு–2042.]*

No.II(2)/LE/389/2011.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக செவ்ரான் லூப்ரிகண்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிட்., குரோம்பேட்டை, சென்னை–44 என்ற நிர்வாகத்திற்கும், செவ்ரான் லூப்ரிகண்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிட்., பாட்டாளி தொழிலாளர் சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

எனவே, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுகொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண் 1**

சென்னை–44, செவ்ரான் லூப்ரிகண்ட்ஸ் இந்தியா பி. லிட். என்ற நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பதவி உயர்வுக்கான கிரேடு முறை உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், தொழிலாளர்களுக்கு கிடைக்கப்பெற வேண்டிய நிவாரணம் என்ன?

**கோரிக்கை எண் 2**

சென்னை–44, செவ்ரான் லூப்ரிகண்ட்ஸ் இந்தியா பி. லிட். என்ற நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பதவி உயர்வுக்கான கிரேடு முறை உருவாக்கப்படும் போது, உருவாக்கப்பட்ட கிரேடுகளுக்கு தகுந்தவாறு ஊதிய விகிதம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், தொழிலாளர்களுக்கு கிடைக்கப்பெற வேண்டிய நிவாரணம் என்ன?

**கோரிக்கை எண் 7**

சென்னை–44, செவ்ரான் லூப்ரிகண்ட்ஸ் இந்தியா பி. லிட். என்ற நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நல்ல தரமான சீருடை மற்றும் பாதுகாப்பு காலணி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், தொழிலாளர்களுக்கு கிடைக்கப்பெற வேண்டிய நிவாரணம் என்ன?

**கோரிக்கை எண் 8**

சென்னை–44, செவ்ரான் லூப்ரிகண்ட்ஸ் இந்தியா பி. லிட். என்ற நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சலவைப்படி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், தொழிலாளர்களுக்கு கிடைக்கப்பெற வேண்டிய நிவாரணம் என்ன?

**கோரிக்கை எண் 11**

சென்னை–44, செவ்ரான் லூப்ரிகண்ட்ஸ் இந்தியா பி. லிட். என்ற நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் ஊதியத்தின் 30 சதவீதம் ஊதிய உயர்வாக வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் ஊதிய உயர்வு கல்வி ஆண்டு தொடக்கத்தில் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், தொழிலாளர்களுக்கு கிடைக்கப் பெற வேண்டிய நிவாரணம் என்ன?

**கே.ப்பி. சுப்ரமணியன்,**
*அரசு கூடுதல் செயலாளர்.*

PUBLIC DEPARTMENT
**(General-1)**

***தலைமைச் செயலகம், 31 ஆகஸ்ட் 2011.***

**துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது 2011.**

No. II(2)/PUG/390/2011.

[விருது – துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது 2011 – ஆணை வெளியிடப்படுகிறது.]

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:–

*[அரசாணை (நிலை) எண் 729, பொது(பொது–1)த் துறை, 12 ஆகஸ்ட் 2011.]*

***படிக்கப்பட்டது:–***

*[அரசாணை (நிலை) எண் 160, பொது(பொது–1)த் துறை, நாள் 7 பிப்ரவரி 2003.]*

**ஆணை—(நிலை), எண் 729, பொது (பொது–1)த் துறை, 12 ஆகஸ்ட் 2011.**

விண்வெளியை வெற்றி கொண்ட முதல் இந்தியப் பெண்மணி எனும் சிறப்பினைப் பெற்ற மறைந்த வீர மங்கை கல்பனா சாவ்லாவின் நினைவைப் போற்றும் வகையில், தமிழகத்தில் உள்ள பெண்கள் கல்பனா சாவ்லாவை முன்மாதிரியாகக் கொண்டு சாகசச் செயல்கள் செய்திட ஊக்கம் பெறும்பொருட்டு, "துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருதினை" தோற்றுவித்து ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தின விழாவின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்விருதினை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்று பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் அறிவிக்கப்பட்டு ஆண்டுதோறும் விருது வழங்கப்பட்டு வருகிறது.

**2.** இவ்விருது, ஐந்து லட்ச ரூபாய் ரொக்கப்பரிசு, தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றினை கொண்டதாகும்.

**3.** 2011ஆம் ஆண்டிற்கான துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருதிற்கென டாக்டர் எஸ். சங்கீதா அவர்கள் அரசினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

**4.** மேலே பத்தி இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள 2011–ஆம் ஆண்டிற்கான துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருதிற்கென தெரிவு செய்யப்பட்டுள்ள டாக்டர் எஸ். சங்கீதா அவர்களுக்கு ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)க்கான காசோலையும் மற்றும் ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மதிப்புள்ள பதக்கம் வழங்க அரசால் ஆணையிடப்படுகிறது.

**5.** மேலே பத்தி நான்கில் அனுமதிக்கப்பட்டுள்ள தொகைக்கான தேவையான நிதி ஒதுக்கீடு 2011–2012ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளது. கீழ்க்காணும் செலவுக் கணக்கு தலைப்பில் பற்று வைக்கப்படல் வேண்டும்:–

"2075.00. பல்வகைப் பொதுவான பணிகள்–800–இதர செலவுகள்–I திட்டத்தில் சேராதது–துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது–59. பரிசுகளும் வெகுமதிகளும்" (து.தொகு 2075 00 800 HZ 5901).

6. டாக்டர் எஸ். சங்கீதா அவர்களுக்கு விருதுத்தொகையான ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) காசோலையாக வழங்கவும், பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகிய செலவினங்களுக்காக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) பிரிவு அலுவலர், பொது (பொது–1)த் துறை அவர்களிடம் வழங்கவும் அனுமதியளிக்கப்படுகிறது.

**7.** இவ்வாணைக்கு நிதித்துறையின் அரசாணை எண் 519, நிதி (சம்பளங்கள்)த் துறை, நாள் 29–09–1997–ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின்படி அத்துறையின் இசைவு தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

**குமார் ஜயந்த்,**
*அரசுச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU